1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த 1-4-1974-க்கு முன் என்றால் அதற்கு முன்னாலே பணியாற்றியவர்கள் அதற்குப் பின்னாலே 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது.

பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் ஆகியவைகளை

இணைத்து நகராட்சியாக்கும் திட்டம்.

*வினா எண். 194—திரு. டி. கே. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், பெருந்துறை, கருமாண்டி செல்லிப்பாளையம் ஆகிய இரு பேரூராட்சிகளை இணைத்து நகராட்சி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்ட ஆட்சியாளர் இதற்கான செயற் குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளார். அவரது செயற்குறிப்பு கிடைத்தவுடன் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆக்குவதற்கு 'ஆம்' என்று மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து, எந்த தேதியில் இருந்து நகராட்சியாக செயல்படும் என்று அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பெருந்துரை, கருமாண்டிசெல்லிப்பாளையம் என்ற இரு பேரூராட்சிகளையும் இணைத்து நகராட்சியாக்கவேண்டும் என்ற செயற்குறிப்புதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய செயற்குறிப்பு அரசுக்குக் கிடைத்த உடன் பரிசீலிக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற பிரச்சினை. அதே சமயத்தில் மக்களுடைய தொகையும், 2 பேரூராட்சிகள் இணைக்கப்படுகின்ற போது நகராட்சிக்குத் தேவையான மக்கள் தொகை இருக்கின்றன போதிய வருவாயும் இருக்கின்றது. ஆகவே இது செயற் குறிப்பிலே இல்லாமல் நடைமுறைக்கு வருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, செயற்குறிப்புகளை வைத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அந்த செயற்குறிப்புகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அது கிடைத்ததும் அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை. அனைத்துத் தகுதிகளிலிருந்தும் பொருளாதாரத் தகுதி பெறாவிட்டால் அரசே உதவி செய்து அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு சில விதி முறைகள் இருக்கின்றன. குறிப்பாக பொது இனங்களின் கீழ் அதன் ஆண்டு வருமானம் 2 லட்சம் ரூ. இருக்க வேண்டும். இதர வருவாய்களின் கூடிய மொத்த வருவாய் ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் இருக்க வேண்டும். மக்கள் தொகை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டு இருக்க வேண்டும்.

வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 195—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவிற்கென வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை எரியோட்டுக்கு மாற்றும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுக்காவாக மாற்றப்பட்டு, 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருப்பினும் தாலுக்கா மருத்துவமனை இல்லாத தாலுக்காவாக வேடசந்தூர் உள்ளது. அங்கேயுள்ள மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் மற்றும் தாலுக்கா மருத்துவ மனையில் இருக்க வேண்டிய வசதிகள் செய்து தரப்படவில்லை. குறைந்த பட்சம் அந்தப் பகுதி மக்கள் 35 முதல் 70 கிலோ மீட்டர் வரயில் பயணம் செய்து தான் படுக்கை வசதி பெற்று மருத்துவ உதவி பெற வேண்டிய நோய்களுக்கு மருத்துவ வசதி பெற வேண்டியுள்ளது. ஆகவே, அங்கே உடனடியாக படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டும் அல்லது அங்கேயுள்ள சுகாதார மருத்துவ நிலையத்தில் 25 முதல் 30 படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?